**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இந்தியாவை இணைத்த இரும்பு மனிதர்!

'உண்மையான போர் வீரன் அதிகம் பேசமாட்டான்; அவனுடைய வெற்றியே அவன் புகழ்பாடும்' என்ற வாசகத்திற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்று அழைக்கப்படும் சர்தார் வல்லபபாய் படேல்.

'என் இதயத்தில் இடம் பிடித்தவர்; என் லட்சியத்தை நிறைவேற்றுவதில் முன் நிற்பவர்; அஞ்சாநெஞ்சம் கொண்ட என் அன்புக்குரிய சகா சர்தார் படேல்' என்பது அண்ணல் காந்தியின் கூற்று. 'படேல், அமைச்சரவையின் வலிமை மிக்க தூண்; வழிகாட்டும் விளக்கு' என்றார் ஜவாஹர்லால் நேரு.

'அண்ணலின் போராட்டங்களுக்கு வெற்றி தேடித்தந்த வில்லாளி படேல்' என்றார் வினோபா பாவே. 'படேல் இந்தியாவின் பிஸ்மார்க்' எனப் பதிவுசெய்தார் அன்றைய வைஸ்ராய் வேவல். 'படேலின் மன உறுதியைக் கண்டு நான் வியக்கிறேன்' என்றார் மவுண்ட்பேட்டன்.

இத்தனை பண்பு நலன்களைக் கொண்ட சர்தார் படேல் பிறந்தது 31.10.1875 அன்று; மறைந்தது 15.12.1950 அன்று; வாழ்ந்தது 75 ஆண்டுகளே. இவர் அண்ணல் காந்தியை விட ஆறு வயது இளையவர். பண்டித ஜவாஹர்லாலை விட 14 வயது மூத்தவர். அண்ணலின் அன்பையும், பாசத்தையும் பெற்றவர். நேருஜியின் நம்பிக்கையையும் மரியாதையையும் பெற்றவர். இந்திய மக்கள் மனதில் தனக்கென ஓர் தனி இடம் பிடித்தவர்.

குஜராத் சபைக்கு காந்திஜி வருகை தந்தார். அந்நிகழ்ச்சிக்குச் சென்ற படேல், அண்ணலின் எளிமை, உள்ளத் தூய்மை, உறுதி, சத்தியம், அகிம்சை ஆகிய அம்சங்களால் கவர்ந்திழுக்கப்பட்டார். அன்றே 'இவரே என் குருநாதர்' என்று அண்ணலிடம் சரணடைந்தார். தன் சத்தியாகிரகப் போருக்கு சரியான தளபதியைத் தேடிக்கொண்டிருந்த காந்திஜிக்கு படேல் கிடைத்தார்.

1917-இல் ஏற்பட்ட காந்திஜி-படேல் உறவு, காந்திஜி மறையும் வரை நீடித்தது. படேல், காந்திஜியிடம் பக்தி கொண்டிருந்தார்; பாபுஜியோ படேலின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். எவருக்கும் கட்டுப்படாதவர் எனப் பெயரெடுத்த படேல், காந்திஜிக்குக் கட்டுப்பட்டார். அவர் சொல்லை கடவுளின் கட்டளையாகவே ஏற்று நடந்தார். ஆகவேதான் 1929, 1946 ஆகிய ஆண்டுகளில், காங்கிரஸ் தலைவர் பதவிக்கு அவரைத் தவிர்த்துவிட்டு, நேருவை காந்திஜி பரிந்துரைத்தபோது அதனை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டார்.

உப்பு சத்தியாகிரகம் தொடங்கி (1930), வெள்ளையனே வெளியேறு இயக்கம் வரை (1942), காந்திஜி அறிவித்த அனைத்துப் போராட்டங்களையும் முன்னின்று நடத்தினார் படேல். ஒவ்வொரு முறையும் கைதாகி சிறைவாசம் அனுபவித்தார். அதில் 16 மாதங்கள் அண்ணல் காந்தியுடன் இருந்த எரவாடா சிறைவாசம் குறிப்பிடத்தக்கது.

சிறைவாசத்தின் இறுதியில் 'படேல் என் தாயைப் போல் பாசத்தோடு என்னை கவனித்துக் கொண்டார்' என நெஞ்சு நெகிழ்ந்து பாராட்டினார் பாபுஜி.



முனைவர் அ. பிச்சை

வி.எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி, காந்திஜிக்கு எழுதிய கடிதத்தில், 'சத்தியம், அகிம்சை, சத்தியாகிரகம் என்று எந்நேரமும் பேசிவரும் நீங்கள் காலப்போக்கில் பைத்தியமாகிவிடக்கூடும்; எனவே, நகைச்சுவை உணர்வு மிக்க ஒருவரை உங்கள் பக்கத்தில் வைத்துக்கொள்வது நல்லது' என்று குறிப்பிட்டார். அதற்கு 'ஹரிஜன்' இதழில் (25.2.1931) பதில் கூறிய காந்திஜி, 'என்னுடைய சிறிய தர்பாரில் படேல் என்னும் விகடகவி உள்ளார். அவருடைய பேச்சுகள் என்னைக் குலுங்க குலுங்க சிரிக்க வைக்கும். அவர் ஒருவரே போதும் என் மனச் சோர்வைப் போக்க' என்று குறிப்பிட்டார்.

சர்தார் படேலின் நகைச்சுவை உணர்வு பலரும் அறியாதது. காந்திஜி பிரம்மச்சரியம் பற்றி அடிக்கடி போதனை செய்வதுண்டு. ஒரு சமயம் படேல், 'பிரம்மச்சரியம் பற்றிப் பேச, பாபுஜியை விட எனக்கே தகுதி உண்டு. பாபுஜிக்கு நான்கு புதல்வர்கள்; நால்வரும் திருமணம் ஆனவர்கள். எனக்கோ இருவர் மட்டுமே; இருவரும் திருமணம் ஆகாதவர்கள். நான் மனைவியை இழந்தவன்; அண்ணலுக்கோ இறை அருளால் கஸ்தூர் பாவின் துணை தொடர்கிறது. நான் மறுமணம் செய்து கொள்ள மறுத்து இன்றுவரை பிரம்மச்சரிய வாழ்க்கை நடத்துகிறேன். அண்ணலின் விரதத்தைவிட என் விரதம் குறைந்ததல்ல' எனக் கூறி எல்லோரையும் சிரிக்க வைத்தார்.

படேல், வழக்குரைஞராகப் பணிபுரிந்த காலத்தில், கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்காக இறுதி வாதம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது சர்தாருக்கு ஒரு அவசரத் தந்தி வந்தது. அதனைப் படித்துவிட்டுத் தனது பைக்குள் வைத்துக் கொண்டார். பின் வாதத்தைத் தொடர்ந்தார்.

வழக்கு விசாரணை முடிந்தபின் வெளியில் வந்த சர்தாரிடம் 'என்ன அந்த அவசரத் தந்தி' என அவரின் நண்பர் கேட்டார். அப்பொழுது படேல் 'என் மனைவி இறந்துவிட்டார். நான் வாதத்தை நிறுத்துவதால் இறந்த என் மனைவியை மீட்க முடியாது. குறைந்தபட்சம் என் வாதத்தின் மூலம் என் கட்சிக்காரரையாவது காப்பாற்றலாமே' என்றார். நண்பர் திகைத்துப் போனார்.

1933-இல் படேல் சிறையிலிருந்தபோது அவரது அண்ணன் காலமானார். அப்பொழுது அரசு படேலுக்கு 'பரோல்' வழங்க முன்வந்தது. ஆனாலும், அதனை மறுத்தார் அவர். அரசின் சலுகையை ஏற்பது இழுக்கு எனஎண்ணியவர் அவர். மேற்கு வங்கத்தின் அன்றைய முதலமைச்சர் டாக்டர் பி.சி. ராய், உள்நாட்டு பிரச்சினை தொடர்பாக பிரதமருக்கு நேரடியாகக் கடிதம் எழுதிக் குறை கூறியிருந்தார்.

தகவல் அறிந்த படேல், முதலமைச்சரைத் தொடர்பு கொண்டு, 'பிரச்சினையை முதலில் என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்; நேரடியாக பிரதமரைத் தொடர்பு கொள்வது நல்ல நிர்வாக முறையின் அடையாளமல்ல' எனக் கடிந்து கொண்டார்.

அன்றைய உத்தர பிரதேச முதல்வர் வல்லப பந்த் புகைப்படக் கண்காட்சி ஒன்றை நடத்தினார். அதில் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின்போது காவல் அதிகாரிகளின் அத்துமீறல் காட்சிகள் இடம் பெற்றிருந்தன. அதனை அறிந்த படேல் 'கடந்த கால நிகழ்வுகளை இப்பொழுது வெளிச்சம் போட்டுக் காட்டுவது இரு நாட்டு உறவை பாதிக்கும்' எனக் கூறினார். கண்காட்சி நிறுத்தப்பட்டது.

**எவருக்கும் கட்டுப்படாதவர் எனப் பெயரெடுத்த படேல், காந்திஜிக்குக் கட்டுப்பட்டார். ஆகவேதான் 1929, 1946 ஆண்டுகளில், காங்கிரஸ் தலைவர் பதவிக்கு அவரைத் தவிர்த்துவிட்டு, நேருவை காந்திஜி பரிந்துரைத்தபோது அதனை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டார் அவர்.**

உயர்நிலைப் பள்ளியில் படித்த போது ஒரு நாள் கணித வகுப்பு நடந்தது. ஒரு கணக்கை கரும்பலகையில் எழுதினார் ஆசிரியர்; ஆனால் அவரால் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. நிலைமையை உணர்ந்த மாணவர் படேல், எழுந்து நின்று 'என்னால் கண்டுபிடிக்க முடியும்' என்றார். ஆசிரியரின் பதிலை எதிர்பார்க்காமல், தானே சென்று சரியான விடையை எழுதி முடித்தார்.

பிரதமர் நேருஜி 1947 டிசம்பரில் வெளிநாடு சென்றிருந்தபோது, சர்தார் படேல் பிரதமர் பொறுப்பு வகித்தார். அது சமயம் அரசியல் நிர்ணய சபையில் காஷ்மீர் பற்றிய விவாதம் நடைபெறத் தொடங்கியது. நேருஜி இல்லாத நேரத்தில் காஷ்மீர் பற்றிய விவாதம் நடைபெறுவதை ஷேக் அப்துல்லா விரும்பவில்லை. கூட்டத்திலிருந்து எழுந்த அப்துல்லா 'நான் காஷ்மீருக்குப் போகிறேன்' எனச் சொல்லிவிட்டு வெளிநடப்பு செய்து விட்டார்.

சிறிது நேரத்தில் ரயிலில் அமர்ந்திருந்த அப்துல்லாவிடம் மகாவீர் தியாகி எம்.பி. 'நீங்கள் கூட்ட அரங்கிலிருந்து வெளியேறலாம்; ஆனால் தில்லியை விட்டு வெளியேற முடியாது. இதுவே படேல் உங்களுக்கு அனுப்பிய செய்தி' என்றார். கலக்கமடைந்த ஷேக் சில நேரத்தில் ரயிலை விட்டு இறங்கினார்; தன் பயண முடிவைக் கைவிட்டார். படேலின் சொல்லுக்கு அவ்வளவு மதிப்பு இருந்தது.

சர்தார் படேல், அண்ணலின் அனைத்துப் போராட்டங்களையும் முன்னின்று நடத்திய மூத்த தளபதி; 565 சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்த ராஜதந்திரி; இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கிய ஐ.சி.எஸ், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். உள்ளிட்ட நிர்வாக இயந்திரத்திற்கு முழு சுதந்திரம் வழங்கிய முதிர்ந்த நிர்வாகி; தனது வாழ்வின் இறுதிவரை பிரதமர் நேருக்குத் தோழனாக, ஆலோசகராக இருந்தவர்; காந்திஜியின் சீடராகவும் நம்பிக்கைக்குரிய தளபதியாகவும் விளங்கியவர்.

இவை நாம் அறிந்ததே. ஆனால் அவரின் தனிப்பட்ட நம்பிக்கைகளை நாம் அறிய வேண்டும். அப்பண்பு நலன்கள் குறித்து அண்ணல் காந்திஜியின் செயலாளர் மகாதேவ தேசாய் குறிப்பிடும்போது, 'சர்தார் கடவுளை வணங்குபவரல்ல; பணிவுள்ளவருமல்ல. குடும்பஸ்தருமல்ல; துறவியுமல்ல. அவர் விவசாயி; தம் தொழிலைச் செவ்வனே செய்யும் திறம்படைத்த விவசாயி' என்று கூறினார்.

அவர் ஒரு கர்மயோகியும் ஆவார். அவரது லட்சியங்கள் இரண்டு மட்டுமே. அவை பாபுஜியும் பாரதமும். ஒருமுறை அவருடைய சகாக்கள் சிலர், 'காங்கிரஸ் கட்சி நம் கையில்; பெரும்பாலான எம்.பி.க்கள் நம் பின்னால். இச்சூழலில் நேருஜியை நீக்கிவிட்டு நீங்களே பிரதமராகி விடலாமே' என்று ஆலோசனை கூறியபோது அதனை நிராகரித்தவர் அவர்.

அது மட்டுமல்ல, 'நேருஜியே என் அரசியல் வாரிசு என்று அறிவித்தது என் குருநாதர் அண்ணல் ஆயிற்றே' அவர் முடிவுக்கு எதிராக நான் என்றும் செயல்பட மாட்டேன். எம்.பி.க்கள் என் பின்னால் நிற்கலாம்; ஆனால் தேச மக்கள் நேருஜியின் பின்னால்தானே நிற்கிறார்கள். அதனை முதலில் புரிந்துகொள்ளுங்கள். அண்ணல் எண்ணியபடி என் இறுதி மூச்சு உள்ளவரை பண்டித நேருவுக்கு துணையாக, தோழனாக, உதவியாக இருப்பேன்' என்று உறுதிபடச் சொன்னவர்; சொன்னபடி நடந்தவர் சர்தார் வல்லபபாய் படேல்.

அன்னை பாரதத்திற்கும் அண்ணல் காந்திஜிக்கும் தன்னையே அர்ப்பணித்த 'இந்தியாவின் இரும்பு மனிதர்' சர்தார் வல்லபபாய் படேலின் நினைவைப் போற்றுவோம்.

**இன்று (அக். 31) சர்தார் வல்லபபாய் படேல் 149-ஆவது பிறந்தநாள்.**

கட்டுரையாளர்:
**காந்திய சிந்தனையாளர்.**

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

முறையாகத் தீனி போடாமல், தெருவில் அலைய விடுவதும், கால்நடைகள் கட்டப்படும் பகுதிகளில் சாணமும், மாட்டு மூத்திரமும் தேங்கி சுற்றுச்சூழலை பாதிப்பதும் எந்த வகையில் நியாயம் என்று கேள்வி கேட்கக்கூட யாரும் தயாராக இல்லை. மாநகராட்சியின் சுகாதாரத் துறையும், பீட்டா அமைப்பினரும், காவல்துறையினரும் இது குறித்துக் கண்மூடி இருப்பதன் மர்மம் என்ன என்பதும் தெரியவில்லை.

அண்மையில் சென்னை திருவல்லிக்கேணியில் முதியவர் ஒருவர் தெருவில் திரிந்த பசுமாட்டால் தாக்கப்பட்டு, பின்னர் உயிரிழந்தார்; தாம்பரத்தில் மாடு மீது மோதி இருசக்கர வாகனத்தில் சென்ற குடும்பத்தினர் படுகாயம் அடைந்தனர் என்பது மட்டுமல்ல, மூன்று வயது குழந்தை இறந்திருக்கிறது; அரும்பாக்கத்தில் பள்ளிக்குச் சென்ற சிறுவன் மாடு முட்டியதால் படுகாயம் அடைந்திருக்கிறான் – இப்படி நாளும் பொழுதும் ஏதாவது ஒரு பகுதியில் ஏதாவது ஒரு சம்பவம் நடந்து கொண்டிருக்கிறது.

சென்னை மாநகரப் பகுதிகளைவிட, புறநகர்ப் பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மிக அதிகம். மாலை வேளைகளில் கிழக்கு கடற்கரை சாலை, பழைய மாமல்லபுரம் சாலையில் பயணித்தால், சாலைகளில் ஆங்காங்கே படுத்துக் கொண்டிருக்கும் கால்நடைகளின் எண்ணிக்கை நம்மை மிரள வைக்கும். திருவல்லிக்கேணி, பழைய மாம்பலம், வடபழனி பகுதிகளும், திருவான்மியூர், நீலாங்கரை, பெருங்குடி, துரைப்பாக்கம், நாவலூர், கேளம்பாக்கம் பகுதிகளும் சாலைகளில் திரியும் மாடுகளால் நிறைந்து காணப்படுகின்றன.

இதுவரை சென்னை மாநகராட்சி தெருவில் திரியும் சுமார் 4,000 மாடுகளைப் பிடித்திருக்கிறது. அபராதம் வசூலித்து அவற்றை விடுவித்து விடுகிறது. ஏறத்தாழ 3,000 பேர் கால்நடையைத் தெருவில் அவிழ்த்து விட்டதாகப் பிடிக்கப்பட்டனர். ஆனால், ஒருவர் மீதுகூட காவல்துறை வழக்குப் பதிவு செய்ததாகத் தெரியவில்லை. தங்களது செலவுக்கு அவ்வப்போது கையூட்டுப் பெறுவதற்குக் கால்நடைகள் சாலைகளில் திரிவது அதிகாரிகளுக்கு வசதியாக இருக்கிறது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

சென்னையில் சாலையில் திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில், கோயம்பேட்டிலும், கொடுங்கையூரிலும் தற்காலிகமாக மாட்டுத் தொழுவங்கள் அமைக்கப்படும் என மாநகராட்சி ஆணையர் ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்திருக்கிறார். சாலைகளில் மாடுகளைப் பிடிக்க மண்டலத்துக்கு ஒரு மாடு பிடிக்கும் வாகனம், பணியாளர்கள், கால்நடை மருத்துவர்கள், சுகாதார ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். சென்னை போன்ற நெரிசல் மிகுந்த நகரத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் மாட்டுத் தொழுவம் அமைப்பது சாத்தியமற்றது. தனியாருக்காக மாநகராட்சி மாட்டுத் தொழுவம் அமைத்துத் தருவது என்பதும் அவசியமற்றது.

கால்நடைகள் தெருவில் திரிந்தால் அவற்றைப் பிடித்து, அரசு கால்நடைப் பண்ணைகளுக்கு அனுப்பினால் மட்டும்தான் இந்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்!

# பாவம், கால்நடைகள்!

பெருநகர சென்னை மாநகராட்சி மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள எல்லா மாநகராட்சிகளும், பெரு, சிறு நகரங்களும் மனிதர்கள் பாதுகாப்பாக நடமாட முடியாத, வாகனங்கள் தங்கு தடையின்றி நகர முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. மழைநீர் வடிகால், புதை சாக்கடை, மெட்ரோ ரயில், மேம்பாலம் என்று ஏதாவது ஒரு காரணத்துக்காக ஆங்காங்கே சாலைகள் தோண்டப்பட்டும், சிதைக்கப்பட்டும் காணப்படும் நிலையில், பொதுமக்கள் அடைந்து வரும் சிரமங்களைச் சொல்லி மாளாது.

நகரத்தின் பெரும்பாலான பகுதிகளிலும் காணப்படும் இன்னொரு மிகப்பெரிய பிரச்னை கால்நடைகள். மக்கள்தொகை குறைந்திருந்தபோது, கிராமப்புறங்களிலிருந்து நகரங்களுக்குக் குடிபெயர்ந்தவர்கள், தங்களது பாரம்பரிய சொத்து என்று சொல்லிக் கொள்வதற்கு எஞ்சியிருந்த ஆடு, மாடுகளையும் கொண்டு வந்தனர். அப்போது 'ஆவின்' போல பால் விநியோகம் செய்யும் நிறுவனங்கள் இல்லாத நிலையில், அவை நகரவாசிகளின் அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்தன.

அப்படி கால்நடைகளைத் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்தவர்களின் தலைமுறை எப்போதோ முடிவுக்கு வந்துவிட்டது. சில நூறு குடும்பங்கள்தான், பெரும்பாலும் புறம்போக்கு நிலங்களைத் தங்களது கால்நடை வளர்ப்புக்காக ஆக்கிரமித்துக் கொண்டு, இப்போதும் பால் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. அரசு நிறுவனமான 'ஆவின்' மட்டுமல்லாமல், பல தனியார் பால் நிறுவனங்களும், தனியார் பால் பண்ணைகளும் செயல்படத் தொடங்கிவிட்ட நிலையிலும், 'கலப்படமில்லாத ஒரு மாட்டின் பால்' என்கிற காரணத்தால், இப்போதும் அதற்கு சில வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர்.

வாழ்வாதாரமாகக் கால்நடை வளர்ப்பு இருப்பது என்பது கிராமப் பகுதிகளில் அத்தியாவசியமானது. ஆனால், நகரங்களில் முக்கியமான புறம்போக்கு இடங்களையும், சொந்த இடங்களையும் கால்நடை வளர்ப்பிற்காகச் சிலர் வைத்துக் கொண்டிருப்பதிலும்கூட தவறில்லை. அவர்கள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளைத் தெருக்களில் நடமாடவிட்டு மற்றவர்களுக்குத் தொந்தரவு ஏற்படுத்துகிறார்கள் எனும்போது, அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தெருக்களில் அவிழ்த்து விடப்படும் பசு மாடுகளும், எருமை மாடுகளும் சுவரொட்டிகளைக்கூட விட்டுவைக்காமல் சுவைத்துச் சாப்பிடுவதைப் பார்க்கும்போது, பால் கறந்து வியாபாரம் செய்பவர்கள் எந்த அளவுக்குத் தீனி போடுகிறார்கள் என்பதை உணர முடிகிறது. தெருவோரக் கடைகளில் இருந்து போடப்படும் 'ஃபிரைட் ரைஸ்' உள்ளிட்டவற்றைக்கூட அவை சாப்பிடத் தயங்குவதில்லை. மாமிச உணவும் உட்கொள்கின்றனவா என்பது தெரியவில்லை.

முறையாகத் தீனி போடாமல், தெருவில் அலைய விடுவதும், கால்நடைகள் கட்டப்படும் பகுதிகளில் சாணமும், மாட்டு மூத்திரமும் தேங்கி சுற்றுச்சூழலை பாதிப்பதும் எந்த வகையில் நியாயம் என்று கேள்வி கேட்கக்கூட யாரும் தயாராக இல்லை. மாநகராட்சியின் சுகாதாரத் துறையும், பீட்டா அமைப்பினரும், காவல்துறையினரும் இது குறித்துக் கண்மூடி இருப்பதன் மர்மம் என்ன என்பதும் தெரியவில்லை.

அண்மையில் சென்னை திருவல்லிக்கேணியில் முதியவர் ஒருவர் தெருவில் திரிந்த பசுமாட்டால் தாக்கப்பட்டு, பின்னர் உயிரிழந்தார்; தாம்பரத்தில் மாடு மீது மோதி இருசக்கர வாகனத்தில் சென்ற குடும்பத்தினர் படுகாயம் அடைந்தனர் என்பது மட்டுமல்ல, மூன்று வயது குழந்தை இறந்திருக்கிறது; அரும்பாக்கத்தில் பள்ளிக்குச் சென்ற சிறுவன் மாடு முட்டியதால் படுகாயம் அடைந்திருக்கிறான் – இப்படி நாளும் பொழுதும் ஏதாவது ஒரு பகுதியில் ஏதாவது ஒரு சம்பவம் நடந்து கொண்டிருக்கிறது.

சென்னை மாநகரப் பகுதிகளைவிட, புறநகர்ப் பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மிக அதிகம். மாலை வேளைகளில் கிழக்கு கடற்கரை சாலை, பழைய மாமல்லபுரம் சாலையில் பயணித்தால், சாலைகளில் ஆங்காங்கே படுத்துக் கொண்டிருக்கும் கால்நடைகளின் எண்ணிக்கை நம்மை மிரள வைக்கும். திருவல்லிக்கேணி, பழைய மாம்பலம், வடபழனி பகுதிகளும், திருவான்மியூர், நீலாங்கரை, பெருங்குடி, துரைப்பாக்கம், நாவலூர், கேளம்பாக்கம் பகுதிகளும் சாலைகளில் திரியும் மாடுகளால் நிறைந்து காணப்படுகின்றன.

இதுவரை சென்னை மாநகராட்சி தெருவில் திரியும் சுமார் 4,000 மாடுகளைப் பிடித்திருக்கிறது. அபராதம் வசூலித்து அவற்றை விடுவித்து விடுகிறது. ஏறத்தாழ 3,000 பேர் கால்நடையைத் தெருவில் அவிழ்த்து விட்டதாகப் பிடிக்கப்பட்டனர். ஆனால், ஒருவர் மீதுகூட காவல்துறை வழக்குப் பதிவு செய்ததாகத் தெரியவில்லை. தங்களது செலவுக்கு அவ்வப்போது கையூட்டுப் பெறுவதற்குக் கால்நடைகள் சாலைகளில் திரிவது அதிகாரிகளுக்கு வசதியாக இருக்கிறது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

சென்னையில் சாலையில் திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில், கோயம்பேட்டிலும், கொடுங்கையூரிலும் தற்காலிகமாக மாட்டுத் தொழுவங்கள் அமைக்கப்படும் என மாநகராட்சி ஆணையர் ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்திருக்கிறார். சாலைகளில் மாடுகளைப் பிடிக்க மண்டலத்துக்கு ஒரு மாடு பிடிக்கும் வாகனம், பணியாளர்கள், கால்நடை மருத்துவர்கள், சுகாதார ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். சென்னை போன்ற நெரிசல் மிகுந்த நகரத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் மாட்டுத் தொழுவம் அமைப்பது சாத்தியமற்றது. தனியாருக்காக மாநகராட்சி மாட்டுத் தொழுவம் அமைத்துத் தருவது என்பதும் அவசியமற்றது.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# குன்றெனெ நிமிர்ந்து நின்றவர்

**ஔவை அருள்**

இந்திய விடுதலைப்போரின் முப்பெருந்தலைவர்கள் என்று போற்றப்பட்டவர்கள் மகாத்மா காந்தி, ஜவாஹர்லால் நேரு, சர்தார் வல்லபபாய் படேல் ஆகியோர். இவர்களில் காந்தியடிகளும் படேலும் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அப்போது குஜராத் தனி மாநிலமாகாமல், அன்றைய பம்பாய் மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தது.

1875 அக்டோபர் 31 அன்று ஜாவேரிபாய் - லதுபாய் இணையருக்கு நான்காவது பிள்ளையாக வல்லபபாய் படேல் பிறந்தார். அகமதாபாதில் வழக்குரைஞர் தொழில் மூலம் பெரும்புகழும் பணமும் வந்தது. குற்றவியல் வழக்குரைஞர்களில் படேல் முன்னணியில் இருந்தார். தன்னுடைய அறிவுக் கூர்மையாலும், ஒப்பற்ற வாதத்திறமையினாலும் சில ஆண்டுகளுக்குள் பெருமதிப்பு பெற்றார்.

படேல், அகமதாபாத் நகர்மன்றத் தலைவராகப் பொறுப்பேற்ற 1924 - ஆம் ஆண்டிலிருந்து அவர் தன் பதவியைத் துறந்த 1929 - வரை, அந்நகரில் சாலைகள் அமைத்தும், குடிநீர் வசதியை ஏற்படுத்தியும், வடிகால்களை அமைத்தும், பூங்காக்களை ஏற்படுத்தியும், மருத்துவ வசதிகளைச் செய்தும் மக்களுக்குத் தொண்டாற்றினார். அகமதாபாத்தை ஒரு முன்மாதிரி நகராட்சியாக்கி சாதனை படைத்தார்.

பர்தோலி வரிகொடா இயக்கப் போராட்டத்தின்போது வல்லபபாய் ஆற்றிய தொண்டு மகத்தானது. அதனை இந்தியா முழுவதுமே பாராட்டி மகிழ்ந்தது. வல்லபபாய் மட்டும் இல்லையேல் போராட்டம் வெற்றி பெற்றிருக்காது என்பதுதான் அனைவருடைய கருத்துமாகும்.

படேலின் துணிகரமான செயல்களை பண்டித நேரு, லாலா லஜபதி ராய், மதன் மோகன் மாளவியா ஆகியோர் பாராட்டினர். காந்தியடிகள் படேலுக்கு 'சர்தார்' என்ற சிறப்புப் பட்டத்தை அளித்து மகிழ்ந்தார்.

வல்லபபாய் படேலின் ஒவ்வொரு சொல்லும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்ததால் அவை அனைத்தும் கேட்போரைப் பிணைக்கும் தன்மையதாய் அமைந்திருந்தன. படேல் எந்தப் பொறுப்பு வகித்தாலும் அதில் திறன்படச் செயல்படுவார். எதையுடன் நேர்மையுடன் செய்யவேண்டும், நீதி நெறியிலிருந்து அணுவளவும் பிறழக்கூடாது என்ற எண்ணத்துடன் செயல்படுவது அவர் பண்பு.

இந்திய விடுதலை வெகுவிரைவில் வரப் போவதை மனதிற்கொண்ட காந்தியடிகள் பண்டித நேருவை அகில இந்திய காங்கிரஸ் குழுத்தலைவராகவும், அதன் பின்னர் விடுதலை இந்தியாவின் பிரதமராகவும் ஆக்கிடவேண்டும் என்று விரும்பினார். இந்த எண்ணத்தைப் புரிந்து கொண்ட படேல், தாம் பண்டித நேருவை விடவும் பதினான்கு ஆண்டுகள் மூத்தவராக இருந்தாலும், காந்தியடிகளின் எண்ணம் போலச் செயல்படுவதற்கு இசைந்தார்.

படேல்தான் காங்கிரஸ் தலைவராக வரவேண்டுமென்று காங்கிரஸிலுள்ள மூத்த தலைவர்கள் பலர் விரும்பினாலும், பெருந்தன்மை மிக்க படேல் அண்ணல் காந்தியடிகளின் உள்ளம் கவர்ந்த உறுதுணையாளராகத்தான் வாழ்நாள் முழுவதும் மிளிர்ந்தார்.

தமக்குத்தான் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்றோ, காந்தியடிகளுக்கு அடுத்து செல்வாக்கு பெற்ற தாமே எதிலும் முன்னிலை வகிக்க வேண்டுமென்றோ எண்ணவே இல்லை.

படேல் எதையும் மனந்திறந்து பேசும் இயல்பு கொண்டவர். உள்ளொன்று புறமொன்று பேசும் தன்மைகொண்டவர் அல்லர். மனதிற்பட்ட நல்ல கருத்துகளை - நாட்டிற்கு நன்மை விளைவிப்பவற்றை யாருக்கும் அஞ்சாமல் சட்டென்று பேசிவிடும் குணமுடையவர். இங்கிலாந்து பிரதமர் சர்ச்சிலையே எதிர்த்துப் பேசும் வல்லவர் என்ற தனிப்புகழ் கொண்டவர் ஆவார்.

சர்தார் வல்லபபாய் படேல் செய்து காட்டிய மாபெரும் செயல், சிதைந்து கிடந்த இந்தியாவை ஒன்றுபடுத்தியதுதான். சமஸ்தானங்களை இந்திய அரசுடன் ஒருசேர இணைத்த பாங்கு, சர்தார் வல்லபபாய் படேலுக்கு பெரும்புகழைப் பெற்றுத் தந்தது. இந்தியத் தலைவர்கள் அவரை 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்று போற்றினர்.

ஏழை மக்கள் அனைவரும் எல்லா வழிகளிலும் மனஅமைதி பெற்று வாழவேண்டும் என்பதே படேலின் நோக்கமாக இருந்தது. மக்கள் அமைதியுடன் வாழ வேண்டுமானால் அரசு ஊழியர்கள் அனைவருக்கும், தாங்கள் மக்களுக்காகத் தொண்டு செய்ய நியமிக்கப்பட்டவர்கள் என்று உணர்வு ஏற்படவேண்டும் என்று கூறினார். நிர்வாகத்தில் எந்த நிலையிலும் ஊழல் இருக்கக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்.

குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் மத்திய அரசைப் போன்று மாநில அரசுகளுக்கும் பங்கு உண்டு என்பதை அவர் நிலைநிறுத்தினார். எனவே, குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாநிலங்களின் சட்டப்பேரவை உறுப்பினர்களும் பங்களிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மகாகவி பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி'யில் ஆணி அடித்தாற் போன்ற அறிவுரைக் கட்டளைகளைப் பார்க்கலாம். 'உடலினை உறுதி செய்', 'நேர்படப் பேசு', 'சீறுவோர்ச் சீறு', 'குன்றென நிமிர்ந்து நில்', 'செய்வது துணிந்து செய்', 'தேசத்தைக் காத்தல் செய்' இவை அனைத்தும் ஒரு தலைவனுக்குரிய தாரக மந்திரங்கள். இந்த நன்மொழிகளுக்கெல்லாம் நடைமுறை இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர்தான் சர்தார் படேல்.

குஜராத்தில் 'வல்லபபாய் நகர்' என்று அவர் பெயரில் ஒரு புதிய நகரம் அமைக்கப்பட்டுள்ளது. பார் போற்றும் வண்ணம் 597 அடி உயர படேலின் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சென்னை கிண்டியில் உள்ள ஒரு சாலைக்கு அவர் நினைவாக 'சர்தார் படேல் சாலை' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

'புதிய இந்தியாவைப் படைத்த பெருந்தகை' என்று பண்டித நேரு, படேலைப் புகழ்ந்தார். 'அண்ணல் காந்தியின் விடுதலைப்போரில் குறிதவறாத வில்லவனாக வல்லபபாய் விளங்கினார்' என்று அறப்போராளி வினோபா பாவே குறிப்பிட்டார்.

இந்திய குடிமைப்பணி, இந்திய காவல் பணி இவற்றை நிறுவிக்காட்டியவர். பிரித்தானிய அரசு பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட அரசு பிரதிநிதி காவலர் படையினை மத்திய பின்னிருப்பு காவல்படையாக மடைமாற்றம் செய்தவர்.

அதனைஉலகில் உள்ள துணை இராணுவப் படைகளிலேயே மிகப்பெரிய படையாக உருவாக்கியவர் - இத்தனை பெருமைக்கும் உரியவர் 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்று அனைவராலும் போற்றப்படும் சர்தார் வல்லபபாய் படேல்.

EVA STALIN IAS

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ஆந்திர ரயில் விபத்து: உயிரிழப்பு 14–ஆக அதிகரிப்பு



ஆந்திர மாநிலத்தில் இரு ரயில்கள் மோதி தடம் புரண்ட விபத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மீட்புப் பணி.

**விசாகப்பட்டினம், அக். 30:** ஆந்திர ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14-ஆக அதிகரித்துள்ளது.

ஆந்திர மாநிலம் விஜயநகரம் மாவட்டம் கண்டகப்பள்ளி பகுதியில் விசாகப்பட்டினம்-பலாசா பயணிகள் ரயில் மீது பின்னால் வந்த விசாகப்பட்டினம்-ராயகடா பயணிகள் ரயில் மோதி ஞாயிற்றுக்கிழமை விபத்து ஏற்பட்டது. இதில் சில ரயில் பெட்டிகள் தடம்புரண்டன.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14-ஆக அதிகரித்தது. இதுதொடர்பாக விஜயநகரம் இணை ஆட்சியர் மயூர் அசோக் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் தீபிகா ஆகியோர் திங்கள்கிழமை கூறுகையில், 'விபத்து ஏற்பட்ட இடத்தில் 13 பேர் உயிரிழந்தனர். மருத்துவமனையில் சிகிச்சையின்போது ஒருவர் உயிரிழந்தார். 50 பேர் காயமடைந்தனர்' என்று தெரிவித்தனர்.

மூத்த ரயில்வே அதிகாரி ஒருவர் கூறுகையில், 'விபத்தில் காயமடைந்தவர்கள் விசாகப்பட்டினம் மற்றும் விஜயநகர மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். பலாசா பயணிகள் ரயிலின் கார்டு எம்.எஸ்.ராவ் (58), ராயகடா பயணிகள் ரயில் ஓட்டுநர் எஸ்.எம்.எஸ்.ராவ் (52), உதவி ஓட்டுநர் சிரஞ்சீவி (29) ஆகியோர் உயிரிழந்தனர்' என்று தெரிவித்தார்.

ஆந்திர அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'ரயில் விபத்தில் உயிரிழந்த ஆந்திர நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்கப்படும்.

விபத்தில் உயிரிழந்த பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தலா ரூ.2 லட்சம், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000 வழங்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துக்கு ராயகடா பயணிகள் ரயில் ஓட்டுநர் எஸ்.எம்.எஸ். ராவ், உதவி ஓட்டுநர் சிரஞ்சீவி ஆகியோர் காரணம் என்பது முதல்கட்ட விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளதாக ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. விதிமுறைகளுக்குப் புறம்பாக ரயில் நிறுத்த சிக்னலை மீறி ராயகடா ரயில் சென்றதால் விபத்து ஏற்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஆசிய துப்பாக்கி சுடுதல்: அனீஷ் பன்வாலாவுக்கு வெண்கலம்

**சாங்வோன், அக். 30:** தென் கொரியாவில் நடைபெறும் ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அனீஷ் பன்வாலா வெண்கலப் பதக்கம் வென்றதுடன், பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதிபெற்றார்.


அனீஷ்

25 மீட்டர் ரேப்பிட் ஃபயர் பிஸ்டல் ஆடவர் தனிநபர் பிரிவில் அவர் 28 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்தார். முன்னதாக, தகுதிச்சுற்றில் அவர் 588 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்தபோதே, அவருக்கான ஒலிம்பிக் இடம் உறுதியானது.

இத்துடன் துப்பாக்கி சுடுதலில் மட்டும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு 12 இந்தியர்கள் தகுதிபெற்றுள்ளனர். அனீஷுடன் இதே பிரிவில் களம் கண்ட மற்றொரு இந்தியரான பவேஷ் ஷெகாவத் 584 புள்ளிகளுடன் 8-ஆம் இடம் பிடித்தார். விஜய்வீர் சித்து 581 புள்ளிகளுடன் 10-ஆம் இடமும், ஆதர்ஷ் சிங் 570 புள்ளிகளுடன் 25-ஆவது இடமும் பிடித்தனர்.

டிராப் ஆடவர் அணிகள் பிரிவில் ஜராவர்சிங் சந்து, கினான் செனாய், பிருத்விராஜ் தொண்டைமான் ஆகியோர் கூட்டணி 341 புள்ளிகளுடன் 2-ஆம் இடம் பிடித்து வெள்ளிப் பக்கம் வென்றது. அதிலேயே தனிநபர் பிரிவில் ஜராவர்சிங் 6-ஆம் இடம் பிடித்தார்.

அதிலேயே மகளிர் பிரிவில் ராஜேஷ்வரி குமாரி, ஷாகன் செளதரி, பிரீத்தி ரஜக் ஆகியோர் முறையே 7, 8, 10-ஆவது இடங்களைப் பிடித்தனர். தற்போதைய நிலையில் இந்தப் போட்டியில் இந்தியா 8 தங்கம் உள்பட 30 பதக்கங்கள் வென்றுள்ளது.

EVA STALIN IAS ACADEMY